# உளவியல் நோக்கில் கம்ப இராமாயணத்தின் சீதை

## From a Psychological Point of View, Sita of the Kamba Ramayana

***த. நாகம்மாள்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல்
மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர்

**Dr. T. Nagammal**
*Assistant Professor Tamil Department*
*Avinasilingam Institute of Home Science and Higher Education for Women, Coimbatore*

## ஆய்வுச் சுருக்கம்

*கம்ப இராமாயணத்தில் சுந்தர காண்டத்தில் காட்சிப் படலத்தில் காணப்படும் சீதையின் உளவியல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அனுமன் அசோகவனத்தைஅடைவதும்சீதையைக்காண்பதும் அங்கு நடைபெறும் நிகழ்வுகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது. உளவியல் கூறுகளாகச் சீதையின் துயரம், சீதைக்கு நேர்ந்த நல் நிமித்தங்கள், கனவு ஆகியவை இத்தலைப்பில் அமைந்துள்ளன. உளவியல் என்பது மனதில் ஏற்படும் சிந்தனைகள் அவை வெளிப்படுத்தும் விதங்கள், குணங்கள், மெய்ப்பாடுகள், பண்புகள், பழக்கவழக்கங்கள், எண்ணங்கள், கற்பனைகள், மனித நடத்தைகள் ஆகியவை ஆகும்.*

***முக்கியச்சொற்கள்:*** *சீதையின் துயரம், நல் நிமித்தங்கள், திரிசடையின் கனவு, அனுமனின் வருகை, அரக்கியர்களின் தன்மை, அனுமன் சீதையைக் காணுதல்*

## Abstract

*In the Kamba Ramayana, the psychology of Sita is depicted in the Sundara Kandam in the visual foil. Hanuman reaching Ashokavanam. The article explores the sighting of Sita and the events that take place there. The psychological aspects of sita's grief, the good deeds of Sita, and the dream are included in this title. Psychology is the thoughts of the mind, the ways in which they express them, the qualities, the facts, the characteristics, the habits, the thoughts, the imaginations, and the human behavior.*

**Keywords:** *Sita's Sorrow, Good Deeds, Trishadai's Dream, Hanuman's Arrival, The Nature of the Demons, Hanuman's Visit to Sita*

**Citation**

Nagammal, T. "From a Psychological Point of View, Sita of the Kamba Ramayana." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 114–118.

**முன்னுரை**

*இராமபிரானின் வரலாற்றைத் தமிழ் நாட்டுப்பண்பாட்டுக்கு ஏற்பப்படைத்தவர் கம்பர். வால்மீகி இராமாயணத்தை அடியொற்றினாலும் கம்பரின் இராமாயணம் தமிழ்ப்பண்பாட்டுக்கு ஏற்ப எழுதியதால் தனித்தன்மை பெறுகிறது. கம்ப இராமாயணம் உலக இலக்கியங்களுள் ஒன்றாக வைத்து மதிக்கத்தக்கது. இராமாயணத்தில் கம்பர் பொதுவாக வால்மீகியைப் பின்பற்றினாலும், கதையைத் தமிழ் மரபிற்கு ஏற்ப அதனோடு இயைந்த முறையில் மாற்றி அமைத்துள்ளார். வால்மீகி இராமாயணத்தில் இல்லாத பலவற்றைக் கம்பர் படைத்துள்ளார். மாயாசனகப் படலம், இரணியன் வதைப்படலம் முதலியன வால்மீகியில் இல்லாதவை. திருமணத்திற்கு முன்பு இராமனும்சீதையும்கண்டுகாதல் கொண்டதாகக்கம்பர்படைத்துள்ளார். வால்மீகி இராமாயணத்தில் அவ்வாறு இல்லை. இராவணன் தரையுடன் பெயர்த்துச் சீதையை எடுத்துச் சென்றதாகப் படைத்துள்ளார் கம்பர். கம்பரது காப்பியம் கற்பனை வளத்திலும், சுவை படச் சொல்வதிலும், நாடகத்தன்மையிலும், உணர்ச்சிக் கேற்ற நடையினைக் கையாளுவதிலும் தன்னிகரற்று விளங்குகிறது. கம்ப இராமாயணத்தில் ஐந்தாவது காண்டமாகச் சுந்தரகாண்டம் இடம் பெற்றுள்ளது. இராமன், சீதை ஆகியோர் அழகு மிகச் சிறப்பாக இக்காண்டத்தில் இடம் பெற்றுள்ளது. இக்காண்டத்தின் முதலில் இருந்து இறுதி வரை அனுமனின் அறிவுக்கூர்மை, சாதுரியம், வீரம், வலிமை, பெருமை முதலியவை அழகாக வருணித்துச் சொல்லப்பட்டுள்ளன. இக்காண்டத்தின் தலைவன் அனுமனே. ஏனைய காண்டங்களில் காவியத் தலைவனான இராமனின் சிறப்புகள் இடம் பெற இக்காண்டத்தில் அனுமனின் சிறப்புகள் இடம் பெற்றுள்ளன. அனுமன் சுந்தரன் எனப்பட்டான். ஆதலால் சுந்தரகாண்டம் எனப் பெயர் பெற்றது என்பர். அனுமன் கடலைத் தாண்டி இலங்கை சென்று சீதையை அசோகவனத்தில் காண்கிறான். இராமனின் கணையாழியைத் தந்து சீதையின் சூடாமணியைப் பெற்று, சம்புமாலி, பஞ்சசேனாதிபதிகள், அக்ககுமாரன் ஆகியோரைக் கொன்று வரு முன்னர் இந்திர சித்தனால் கட்டப்பட்டு இராவணன் அவைக்குச் செல்கிறான். இராவணன் அனுமனின் தூதினை ஏற்காததால் இலங்கைக்கு எரியூட்டி இராமனிடம் சூடாமணியைத் தந்து செய்தி உரைக்கிறான். இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் சீதையைத் தேடி காணப்பெறாத அனுமன் இறுதியாக அசோகவனம் அடைகிறான். அங்கும் சீதை கிடைக்கப்பெறவில்லை எனில் இலங்கையை அழித்து பின் தானும் இறப்பேனென மனத்தில் எண்ணி அச்சோலைக்குச் சென்றான். அப்பொழுது தேவர்கள் மகிழ்ச்சியுடன் மலர்களைத் தூவி அனுமனை வாழ்த்தினர்.*

**இராமனைப் பிரிந்த சீதையின் துயரம்**

*இராமனைப் பிரிந்த சீதை அத்துயரத்தினால் உடல் மிகவும் மெலிந்தவளாக அரக்கியர் சூழ, உறக்க மில்லாதவளாக அமர்ந்திருந்தாள். இது மன வருத்தம் கவலையினால் உறக்கம் வரவில்லை. இதுவே இராமன் அருகிலே இருந்திருந்தால் மன மகிழ்ச்சியில் நீண்டநேரம் உரையாடுவதிலும் இராமன் ஓய்வு எடுக்கும் தருணத்திலும் கணவனைப் பேணிக் காப்பதிலும் உறங்கியிருக்கமாட்டாள். இல்லறமே நல்லறம் என்பர் சான்றோர். ''கணவனே கண்கண்ட தெய்வம்'' என்கிறது பழமொழி. கற்புடைய பெண்டிற்கு அழிவு நேர்ந்தால் அற மேகாவலாகும் என்கிறது கம்ப இராமாயணம். ''உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்'' என்கிறது சிலப்பதிகாரம். இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் முடிந்து 14 ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டிருந்தனர். அவர்கள் வசிக்கும் காடு முல்லைத் திணை வகையைச் சார்ந்தது. கடவுள் திருமால். திருமாலின் அவதாரம் தான் இராமபிரான். சூரிய குலத்தில் உதித்த இராமபிரான் பகலெங்கும் நாட்டையும் வனத்தையும் கண்காணித்து விட்டு மாலைப்பொழுதிலே தான் தன்*

*மனைவி சீதையைச் சந்திப்பான். சிறு பொழுது மாலை ஆகும். சுயம் வரத்திலே வில்லை ஒடித்து கழுத்திலே மாலையிட்டு தன் கைப் பிடித்த பின்பு கணவன் சொல்லைக் கேட்பது மனைவியின்கடமை.''மனைக்கு விளக்கம்மடவார்'' என்கிறது நான்மணிக்கடிகை.''வினையே ஆடவர்க்கு உயிரேமனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'' என்கிறது குறுந்தொகை. கம்ப இராமாயணத்தில் ஒரு பாடல் இராமனின் பிரிவை எடுத்துரைக்கிறது. வனவாசத்தில் நடந்ததும் சீதையின் மனப்போராட்டங்களையும் கூறுகிறது. மெய்ப்பாடுகள் பொருந்திய வண்ணம் இப்பாடல் உள்ளது,*

***விழுதல், விம்முதல், மெய்யுறவெதும்பல், வெருவல்,***
***எழுதல், ஏங்குதல், இரங்குதல், இராமனைஎண்ணித்***
***தொழுதல், சோருதல், துளங்குதல், துயருழந்துஉயிர்த்தல்***
***அழுதல், அன்றிமற்றுஅயல்ஒன்றும்செய்குவதுஅறியாள்***
***(கம்ப இராமாயணம், சுந்தரகாண்டம், காட்சிப்படலம், பாடல் எண் 5073,***
***தமிழ் இணையக் கல்விக்கழகம் உரைகள்)***

*என்று சீதையின் துயர நிலையை விளக்குகின்றார் கம்பர். இராமனைப் பிரிந்த துயரத்தால் சீதையின் கண்கள் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கின. அக்கண்ணீரால் சீதையின் ஆடை நனைவதும், பிரிவுத் துயரின் பெருமூச்சால் அந்த ஆடை உலர்வதும் மாறி மாறி நிகழ்ந்தது. உடல் காய்ச்சல் வருவது போல் சூடாகக் கொதிக்கிறது. அத்தருணத்தில் கண்ணீர் வந்து மேனியில் பட்டு உடலை ஈரமாக்குகிறது. அறிஞர் அண்ணா இறந்த போது கலைஞர் ''இதயத்தைத் தந்திடு அண்ணா'' என்ற தலைப்பில் கவிதைகள் படைத்தார். அக்கவிதையில்,*

*கண்ணொளியின் கதகதப்பில் வாழ்ந்தோமே இன்று கண்ணெல்லாம் குளமாக மாற்றிவிட்டாயேசு என்ற வரிகள் இதற்குப் பொருத்தமாக அமைகின்றன. ''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'', ''வினை விதைப்பவன் வினை அறுப்பான்'', ''தினை விதைப்பவன் தினை அறுப்பான்'' என்ற பழமொழிகளை நினைவுபடுத்தும் வகையில் ஊழ்வினையின் பயனை அனைவரும் பெற்றேதீர வேண்டும். அதனால் சீதை தன் உயிரை மாய்த்துக் கொள்ளாதிருந்தாள். இதே போல் மணிமேகலை காப்பியத்தில் பொருளீட்டச் சென்ற சாதுவன் நெடு நேரம் ஆகியும் திரும்பி வரவேயில்லை. அதனால் அவன் மனைவி ஆதிரை தீ மூட்டச் சென்றாள். அசரீரி உன்னுடைய கணவர் திரும்பி வருவார் என்று கூறியது. உடனே ஆதிரை கணவர் சாதுவன் வருகையை எண்ணி மன மகிழ்ந்தாள். கம்ப இராமாயணத்தில் சீதையும் தனது கணவர் இராமபிரான் தன்னை மீட்க எப்படியும் வருவார் என்று உறுதியோடு நம்பினாள். இராமன் தன்பொருட்டு வாராது இருப்பினும், சூரிய குலத்திற்கு நேர்ந்த பழியை நீக்கும் பொருட்டு வருவார் என்று இராமனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். மாசு படிந்த உடையோடும் ,உடலோடும், கலைந்த கூந்தல் ஒற்றைச்சடை பின்னலோடும் காணப்பட்டாள். மாசு இல்லாதது அவளுடைய குணம். அரக்கியர்கள் அமாவாசையாக இருந்த போது சீதை பௌர்ணமி நிலவானவள். மானின் பின் சென்ற இராமனை, இலக்குவன் கண்டாரோ? இல்லையோ? கண்டிருந்தாலும் இராவணன் தன்னை எடுத்துச்சென்றதை அவர்கள் அறிய மாட்டார்கள். இலங்கை மாநகர் இருக்கும் இடமும் அவர்களுக்குத் தெரியாது. தன்னை இராவணன் எடுத்து வந்த செய்திசடாயுவிற்கு மட்டுமே தெரியும். அவர் இறந்திருப்பின் இப்பிறவியில் இராமனையும், இலக்குவனையும் மீண்டும் காணுதல் அரிதான செயல் என்பதை நினைத்து அழுதாள். மானைத் தேடி இராமன் சென்ற பொழுது தன்னுடன் இருந்த இலக்குவனிடம் கடுஞ்சொற்கள்*

*கூறியதை எண்ணி வருந்தினாள். அதனால் இராமன் தன்னை அறிவில்லாதவள் என்று எண்ணி வெறுத்து விட்டார் போலத்தெரிகிறது. முன் பிறவியில் செய்த தீயவினைகளால் இச்செயல் நிகழ்ந்தது என்று எண்ணி பலவாறாக வருந்தினாள். "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் குறிப்பிடுகிறார். இராமனுக்கு உணவைப் பரிமாறவும், விருந்தினரை வரவேற்று உணவளிக்கவும் தான் அவருடன் இல்லாது எவ்வாறு துயரப் படுகிறாரோ என இராமனின் நிலையை எண்ணி வருந்தினாள். இப்பிரிவுத் துயரைப்போக்கும் மருந்து இல்லையென மயங்கினாள். கொடுமை வாய்ந்த அரக்கர் இத்தனை நாட்கள் தன்னை விட்டு வைக்காது, கொன்று தின்றிருப்பர் என்றும், இராமனின் பொறுமை காரணமாகவும், தன்னைத் தேடாது விட்டு விட்டாரோ என்று அஞ்சினாள் சீதை. மேலும் தாய்மார்களும், பரதனும் இராமனைத் தேடி வந்து அயோத்திக்கு அழைத்துச் சென்று விட்டனரோ என்று கருதினாள். முன் பிறவியில் தனது மாமனார் தசரதன் அதாவது இராமனின் தந்தை சிரவணனிடமிருந்து தாய், தந்தையை அறியாது பிரித்து விட்டதன் விளைவு இராமன் தனது தந்தை தசரதனைப் பிரியும் நிலை ஏற்பட்டது. பின்பு கைகேயியினால் 14 ஆண்டுகள் வனவாசம் இராமனுக்கு ஏற்பட்டது. வனவாசத்தை முடிக்காது இராமன் அயோத்திக்குச் செல்லமாட்டார் என்பதை நினைத்து சீதை மனம் தெளிந்தாள். இராமனுக்குத் தீங்கு ஏதேனும் நிகழ்ந்து விட்டதோ என்று மனம் வருந்தினாள்.*

*கரன், தூடணன், திரிசரன் மற்றும் பதினாலாயிரம் வீரர்களுடன் போரிட்டு அவர்களை வீழ்த்தியது போன்று தற்பொழுதும் அரக்கர்களுடன் இராமன் போரிட்டுக் கொண்டிருக்கிறாரோ என வருந்தினாள். அரச பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு தசரதன் கூறியபொழுதும், பதவியைத் துறந்து பதினான்கு ஆண்டு காலம் வனவாசம் செல்லவேண்டு மெனக் கைகேயி கூறிய பொழுதும் எவ்வித மாற்றமுமின்றி செந்தாமரை மலர் போன்ற மலர்ந்த முகத்துடன் இருந்த இராமன் முகத்தை நினைத்தாள்.*

*சிவபெருமான் வளைத்த மேரு மலையைப் போன்ற வில்லினை வளைத்த இராமனின் தோள் வலிமையை எண்ணி உடல் மெலிந்தாள். இந்திரனுக்குத் துன்பங்கள் பல செய்த கரதூடணார் உள்ளிட்ட பதினாலாயிரம் படைகளைச் சிறிது நேரத்தில் போரிட்டு வீழ்த்திய இராமனது வில்லின் சிறப்பை நினைத்தாள். வேடர் குலத்தலைவனாகிய குகனிடம் இலக்குவன் உனக்குத் தம்பி, எனக்குத்தோழன், சீதை உனக்குக் கொழுந்தி என்று கூறிய இராமனின் நட்புச் சிறப்பை எண்ணி கலங்கினாள். ஜனக மன்னன் தன் கைகளைப் பற்றி இராமனின் கைகளைக் கொடுக்கவும், பிறகு தன்பாதத்தைத் தருப்பைப்புல்லில் வைத்த திருமண நிகழ்வை மனதில் நினைத்தாள். இராமன் பரதனை முடி சூடு மாறு கூறிய பொழுதும் அதனை ஏற்காமல் மறுத்த பரதனுக்காக வருத்த முற்றதை எண்ணி வருந்தினாள். தனக்குரிய அரச பதவியைத் துறந்து பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்யப் புறப்பட்ட நிலையில் இராமன் அனைவருக்கும் பொருட்களைத் தானம் வழங்கினான். அப்பொழுது தன்னிடம் வந்த அளவில்லா ஆசை கொண்ட அந்தணனுக்குப் பசுக்கூட்டங்களை வழங்கிய போது என்னுடன் சிரித்ததை அவள் எண்ணினாள். பரசு இராமனின் தவத்தையும், வில்லையும் பெற்ற இராவணனின் மேன்மையைக் கருதினாள். காம எண்ணம் கொண்டு காக வடிவமாய் வந்த இந்திரன் மகனாகிய சயந்தனின் ஒரு கண்ணைப் போக்கி, அன்று முதல் காக்கைகளுக்கு ஒரு கண் இல்லாதனவாகச் செய்த இராமனின் வெற்றிச் சிறப்பை நினைத்தாள். விராதனனின் பாவச் செயலையும், சாபத்தையும் நீக்கிய இராமனின் அருள் சிறப்பை எண்ணினாள். அப்பொழுது வீடணன் மகளான திரிசடை தவிர மற்ற அரக்கியர் அனைவரும் உறக்கத்தில் இருந்தனர்.*

**சீதைக்கு நேர்ந்த நல் நிமித்தங்கள்**

*சீதை தனக்குத் தோன்றிய நல்ல நிமித்தங்களைத் தாயினும் இனியவளாக விளங்கிய திரிசடையிடம் கூறத்தொடங்கினாள். சீதையின் புருவம், கண், நெற்றி ஆகியவை இடப் பக்கமாகத் துடித்தன. இதனால் நன்மை ஏற்படுமோ, தீமை ஏற்படுமோ என்று சீதை அஞ்சினாள். விசுவாமித்திர முனிவர் ராமனை அழைத்துக் கொண்டு மிதிலைக்கு வந்த பொழுது சீதையின் புருவமும், தோளும், கண்ணும் இடப்பக்கம் துடித்தன. இராமன் தனக்குரிய அரச பதவியைத் துறந்து பரதனுக்குக் கொடுத்துவிட்டு வனவாசம் புறப்பட்ட பொழுதும் சீதையின் வலப்பக்கம் துடித்தது. இராவணன் சீதையை எடுத்துச் செல்ல வந்த நாளிலும் அவளது வலப்பக்கம் துடித்தது. இவ்வாறு நன்மை நிகழ விருந்தபோதெல்லாம் அவளது புருவம், கண், தோள், நெற்றி ஆகிய உறுப்புகள் இடப்பக்கமும், தீமை நிகழ விருந்தபோதெல்லாம் வலப்பக்கமும் துடித்ததைத் திரிசடையிடம் கூறினாள் சீதை. சீதைக்குத் தோன்றிய நல்ல நிமித்தங்களைக் கேட்ட திரிசடை, சீதை இராமனைச் சேர்வது உறுதி. இனி நன்மையே நிகழும் என்று கூறி அவளது அச்சத்தைப் போக்கினாள். மேலும் திரிசடை சீதை அருகே இருக்கும் போது சீதையின் செவியருகே பொன் நிற முடைய ஒருவண்டு வந்து சென்றதைக் கண்டு அதனையும் நன்மை நடக்க விருப்பதற்கு அடையாளமாகவே கருதி சீதையிடம் கூறினாள். தசரதன் கைகேயி இடம் இரண்டு வரங்களைக் கொடுத்த தன் விளைவு குடும்பத்தில் மிகப்பெரிய கலகங்களை ஏற்படுத்தி உள்ளது. அண்ணன் தம்பிக்கு இலக்கணமானவர்கள் இராமன், இலக்குவன் இருவரும். இலக்குவன் இராமனுக்குச் சேவைகள் செய்தே தன் மனைவி ஊர்மிளையுடன் வாழவில்லை.*

**தொகுப்புரை**

*கம்ப இராமாயணத்தில் இப்பாடலில் வெளிப்பட்ட செய்திகள் யாவும் இராமனைப் பிரிந்த சீதாதேவியின் உளவியலை எடுத்துரைக்கின்றன. சுந்தர காண்டத்தில் சீதையை இராவணன் எடுத்துச் சென்ற போது சீதை அசோகவனத்தில் இருந்த போது அவள் எண்ணிய நினைவுகள், புலம்பல்கள், அவள் அடைந்த மன வருத்தங்கள் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன.*

**துணைநூல்பட்டியல்**


1. *கம்ப இராமாயணம், மின்பதிப்பு நூல், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை.*
2. *காப்பியஇலக்கியம், கம்பஇராமாயணம், தொலை நிலைக்கல்வி, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*


## References


1. *Kamba Ramayanam, e-edition, Tamil Virtual Academy, Chennai.*
2. *Kappiya Ilakiyam, Kamba Ramayanam, Distance Education, Tamil University, Thanjavur.*